DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

Calendar ...

Miscellaneous ...

Preliminary Register ... Case No: ST.C. No. 358/2024

Session ...

Prosecution / PW-1

Deposition of Witness for ... Defence / Court

---

Name : திரு.மோகன்தாஸ்

Father's Name (or)

Husband Name : த/பெ.நாகு

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 06.08.2025

---

**முதல் விசாரணை**

நான் தற்போது ஆர்எஸ்மங்கலத்தில் குடியிருந்து வருகிறேன். இவ்வழக்கில் எனது தரப்பில் சங்கதிகளை சத்தியபிரமாணத்தின் பேரில் நிரூபண வாக்குமூலம் வாயிலாக இவ்வழக்கில் தாக்கல்செய்துள்ளேன். மேற்படி நிரூபண வாக்குமூலத்தில் இடம்பெற்றுள்ள விவரங்கள் அனைத்தும் எனக்கு நன்கு தெரியும். அதனை நன்கு படித்து பார்த்து அதில் நான் கையொப்பம் இட்டேன்.

1. என்னிடம் காட்டப்படும் 12.06.2023 தேதி நான் இவ்வழக்கில் எதிரியுடன் செய்து கொண்ட உறுதிமொழி ஒப்பந்தபத்திரம் அசல் (எதிரி தரப்பு ஆட்சேயபணையுடன்) **ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. என்னிடம் காட்டப்படும் எதிரி எனக்கு கொடுத்த 30.11.2023 தேதியிட்ட காசோலை எண்.000157 அசல் **ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3 என்னிடம் காட்டப்படும் மேற்படி காசோலை போதிய பணமில்லை என 01.01.2024 தேதி வங்கியால் திருப்பப்பட்டதற்கான மெமோ அசல். **ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. என்னிடம் காட்டப்படும் 08.01.2024 தேதி நான் எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல். **ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

5 என்னிடம் காட்டப்படும் 08.01.2024 தேதியிட்ட மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதற்கான அஞ்சலக ரசீது அசல் **ம.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

6. என்னிடம் காட்டப்படும் 12.01.2024 தேதியிட்ட எதிரி மேற்படி நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை பெற்று கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை அசல் **ம.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

மேற்கண்ட ஆவணங்கள் மற்றும் எனது தரப்பு சங்கதிகளை பரிசீலனை செய்து எதிரிக்கு மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138 ன் கீழ் உரிய தண்டனையும் குற்றவியல் நடைமுறை சட்டம் பிரிவு 357 ன் படி எனக்கு நஷ்டஈடு வழங்க உத்தரவிடுமாறு இந்நீதிமன்றத்தை பணிந்து கேட்டு கொள்கிறேன்.

(எதிரி தரப்பு வழக்கறிஞர் கேட்டுகொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

Taken down by me/before me in
open court,interpreted/read over
to the witness and admitted by the
deponent to be correct.

Sd.-/J.Antony Rishandev,
Judicial Magistrate,
Thiruvadanai.